தென்றல் செல்வராஜ் தலைமை! மணிமாறன் தென்றல் வரவேற்புரை! எம்.அமுதபாரதி –இரா.நவநீதகிருஷ்ணன் முன்னிலை!

பொள்ளாச்சியில் கழக சட்ட திட்ட திருத்தக் குழு சார்பில் கலைஞர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

தளபதி முருகேசன் – கோவி.செழியன் – ஈரோடு இறைவன் – திப்பம்பட்டி ஆறுச்சாமி சிறப்புரை!

பொள்ளாச்சி, ஜூலை.17- முத்தமிழறிஞர் தலைவர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழா மற்றும் பொள்ளாச்சியில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்த பொதுமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கழக சட்டதிட்ட திருத்தக்குழு சார்பாக அதன் உறுப்பினர் தென்றல் செல்வராஜ் தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் வருகை தந்த அனைவரையும் வரவேற்று பேசினார்.

பொள்ளாச்சி தெற்கு நகர செயலாளர் எம்.அமுதபாரதி, வடக்கு நகர செயலாளர் இரா.நவநீதகிருஷ்ணன், வடக்கு மத்திய ஒன்றிய செயலாளர் பா.ராஜு, கிணத்துக்கடவு தெற்கு ஒன்றிய செயலாளர் சே.ஆ.துரை, கிணத்துக்கடவு மத்திய ஒன்றிய செயலாளர் அல்தாப் உசேன், ஆனைமலை எஸ்.எஸ்.யுவராஜ் ஆனைமலை மத்திய ஒன்றிய செயலாளர் எஸ்.ஆர்.அண்ணாதுரை, பெரிய நெகமம் பேரூர் கழக செயலாளர் எம்.முத்துக்குமார், வேட்டைக்காரன்புதூர் பேரூர் கழக செயலாளர் பார்த்திபன், கோட்டூர் பேரூர் கழக செயலாளர் ராமகிருஷ்ணன், நகராட்சி தலைவர் ந.சியாமளா நகராட்சி துணைத் தலைவர் எஸ். கௌதமன், நகர துணைச் செயலாளர் ஆர்.நாச்சிமுத்து, நகர மன்ற உறுப்பினர் பி.ஏ.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் உயர்கல்வித் துறை அமைச்சர் திருவிடைமருதூர் சட்டமன்றத் உறுப்பினர் முனைவர் கோவி .செழியன் , கழக இலக்கிய அணி இணை செயலாளர் ஈரோடு இறைவன், முன்னாள் தமிழ்நாடு தூய்மை நல வாரிய தலைவர் கழக ஆதிதிராவிடர் நலக் குழு இணை செயலாளர் திப்பம்பட்டி வே. ஆறுச்சாமி ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்

பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் கே.நித்தியானந்தன் மற்றும் வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் குட்டி (எ) சுதாகர் ஆகியோர் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து சிறப்புரை நிகழ்த்தினார்

தலைமை கழக பேச்சாளர்கள் ஈரோடு இளையகோபால் , மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தனம் தங்கதுரை, அதிரடி அல்தாப், வழக்கறிஞர் இமயவர்மன், முன்னாள், இளம் பேச்சாளர் சா.பூங்கொடி ஆகியோர் சிற்றுரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் மயூரா சுப்பிரமணியம், மாவட்ட பொருளாளர் ஜெயபிரகாஷ், கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர் பொள்ளாச்சி சித்திக் தலைமை செயற்குழு உறுப்பினர் மு க முத்து பொதுக்குழு உறுப்பினர் ஆச்சிபட்டி பாலகிருஷ்ணன், நகர துணை செயலாளர் தர்மராஜ், நகர துணை செயலாளர் பாத்திமா அக்பர், நகர பொருளாளர் ஆகிமூர்த்தி, மாவட்ட பிரதிநிதி இரும்பு சுப்பிரமணியம், மாவட்ட பிரதிநிதி ஸ்வீட் நாகராஜ்,

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் பிரபாகரன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் சே.கு.பாலச்சந்தர், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சுரேஷ், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் கவிதா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் திருமலைராஜா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சபரி கிருஷ்ணன், மாவட்ட ஆதிராவிடர் நலக்குழு அணை தலைவர் சீராபாளையம் செந்தில், மாவட்ட பிரதிநிதிகள் செம்மேடு டி நாகராஜ், சேத்துமடை இளங்கோ , மாவட்ட மகளிர் அணி செல்வி , மாவட்ட தொண்டரணி தலைவர் கராத்தே ராஜா, மாவட்ட தொண்டர் அணி துணைத் தலைவர் ஆட்சிபட்டி சுரேஷ்குமார் நகர மன்ற உறுப்பினர்கள் மாணிக்கராஜ் கவிதா, டேஸ்டி பாலு சு.தங்கவேல், விஜயா காயத்ரி, சண்முகப்பிரியா, கனகராஜ் கீதா, சிவசாமி உமா மகேஸ்வரி

மாவட்ட நிர்வாகிகள் ஆர்.மகேந்திரன் தனபால கிருஷ்ணன் அவினேஷ் கார்த்திக் ஆ சதீஷ் எம் வீரப்பன் ஷாநவாஸ், கமலக்கண்ணன், கே.வி.ஆறுமுகம், ராஜபெருந்தகை, குரும்பை கனகு, குமார் ராஜ், நகை வெள்ளிங்கிரி , பேங்க் தங்கராஜ், முனிசி பாலிட்டி, சண்முகசுந்தரம், பேங்க் விஜயன்,

வட்டக் கழக செயலாளர்கள் ஜெயச்சந்திரன் போஜராஜன் நாகேந்திரன் ஜெகதீஷ் கா. ஜெய்லாப்தீன் , விஜயகுமார், அருண் கார்த்திக், கே பி மணிகண்டன், எம்.ஜெய்லாப்தீன், எஸ்.கணேசன், சி ஆறுமுகம், ரமேஷ் குமார் , செந்தில்ராஜ்

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் ஆர் செல்லப்பன் எம் சுரேஷ் குமார் செந்தில்குமார் கதிர் வடிவில் மனோகரன் சார்பு அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் வடக்கு நகர இளைஞரணி அமைப்பாளர் யுவராஜ் தெற்கு நகர இளைஞரணி அமைப்பாளர் முத்துக்குமார் துணை அமைப்பாளர்கள் ஈஸ்வரன் நபியின் சபரி முத்துவீரன் பாலமுருகன் அபூபக்கர் சித்திக் பூபதி, நகர மாணவரணி துணை அமைப்பாளர் நவநீதகிருஷ்ணன், சிட்டி டிவி உசேன், ராஜ்பிரபு , ஆட்டோ ராமு , ஆட்டோ நாகராஜ், நிஜாமுதீன், பிரவீன்குமார் , பாஸ்கர், சுகாஷ்பிரபு, மணியாளன், விக்னேஷ்குமார், மரகதம், ரஞ்சித், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் கரியாம்பட்டி செல்வராஜ் , வடுகை லிங்கதுரை , மலர்பாலு, கருமாபுரம் சுரேஷ், விக்னேஷ் பிரபு, சதீஷ் ஜெகநாதன், கு.மரேந்திரன், எஸ். கௌதம் , தாஸ் பிரபு, கீர்த்தி ஆனந்த், ஆர். தினேஷ் , ரா.கோகுலவாணன், சபரிதுரை, ஊத்துக்குளி அரவிந்த், பிரவீன் துரை, அபிராமி கிருபா, சுதீஷ்ராஜ், புகைப்படக் கலைஞர் போட்டோ பாபு மற்றும் பலர் கலந்து கொண்டனர். வருகை தந்த அனைவருக்கும் பொள்ளாச்சி தெற்கு நகர விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் பொறியாளர் எஸ். சரவணகுமார் நன்றி கூறினார்.

தமிழ்நாட்டின் கட்டமைப்பு - வளர்ச்சிக்கு பெருந்தலைவர் காமராசர் ஆற்றிய பங்களிப்புகள் மகத்தானவை!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!



சென்னை, ஜூலை 17 - தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக உழைத்த பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்தநாள் இன்று.

தமிழ்நாடெங்கும் மூடப்பட்ட 6000க்கும் மேற்பட்ட பள்ளிகளைத் திறந்து, மதிய உணவு திட்டம் இலவச சீருடை பாடப்புத்தகங்கள் என கல்வி வளர்ச்சிக்கும்,

தொழில்துறை வளர்ச்சி, அணைகள் உருவாக்கம் என தமிழ்நாட்டின் கட்டமைப்பு வளர்ச்சிக்கும் காமராசர் ஆற்றிய பங்களிப்புகள் மகத் தானவை.

பெருந்தலைவர் காமராசருக்குப் பெருமை சேர்த்த கலைஞர்!

சென்னை மெரினா சாலைக்கு காமராசர் அவர்களின் பெயரை சூட்டியது குமரியில் நினைவு மண்டபம் அமைத்தது, காமராசரின் பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாளாக நடைமுறைப்படுத்தியது என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காமராசருக்குப் பல்வேறு பெருமைகளைச் சேர்த்தார்கள்.

கலைஞர் அவர்கள் வழியில், நம்முடைய தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நம் திராவிட மாடல் ஆட்சியின் போது, காமராசர் கல்லூரி மேம்பாட்டுத்திட்டம், பரம்பிக்குளம் ஆழியார் திட்டத்துக்கு அடித்தளம் அமைத்ததற்காக காமராசர் அவர்களுக்கு திருவுருவச்சிலை திருச்சியில் காமராசர் பெயரில் மாபெரும் அறிவுலகம் என காமராசரின் புகழை மென்மேலும் போற்றினார்கள்.

கல்விக்கண் திறந்த காமராசர் அவர்களின் புகழ் ஓங்கட்டும்!

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

கனிம வள வழக்கில் தொடர்புடைய முதல்வரின் நண்பர் ஜனார்த்தன ரெட்டிக்காக தமிழ்நாடு ஆற்று மணலை கொள்ளையடிக்க முயற்சிப்பதா?

முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு கேள்வி!



நெல்லை, ஜூலை 17 - கனிம வள வழக்கில் தொடர்புடைய உங்கள் நண்பர் ஜனார்த்தன ரெட்டிக்காக தமிழ்நாட்டின் ஆறுகளில் மணல் எடுக்க உத்தரவிட்டுள்ளீர்களா? கன்னியாகுமரி மாவட்ட கடற்கரை அணு கனிம மணல் எடுக்க ஓராண்டு நீட்டித்து உத்தரவிட்டது போல்,தமிழக ஆற்று மணலையும் கொள்ளையடிக்க முயற்சிப்பதா? என முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது.

தமிழ்நாட்டின் முக்கிய ஆறுகலான பாலாறு, காவேரி,வைகை,தாமிரபரணி ஆறுகளில் மணல் எடுப்பதால் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு குடிநீர், விவசாயம் போன்ற அடிப்படை தேவைகளுக்கு தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டு தமிழ்நாடே பாலைவனமாக மாறிவிடும் என்பதால் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ம் தேதி சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆற்று மணலுக்கு பதிலாக கட்டுமான பணிகளுக்கு குவாரி மணல் (M sand) பயன்படுத்த வேண்டுமென்றும், தமிழ்நாட்டு ஆறுகளில் முழுமையாக ஆற்று மணல் எடுப்பதற்கு தடை விதிக்க வேண்டுமென்றும்நான்தொடர்ந்து பொதுநல வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் அவர்கள் 2017 ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் தேதி பிறப்பித்த உத்தரவில் அன்றைய தமிழக தலைமைச் செயலாளர், நீர்வளத்துறை, பொதுப்பணித்துறை மற்றும் சம்மந்தப்பட்ட அரசு செயலாளர்கள் கொள்கை முடிவுவெடுக்க வேண்டும் என்ற உத்தரவின் அடிப்படையில் தொடர்ந்து 2026 வரை ஆட்சியில் இருந்த அரசுகளும் , எடுத்த தொடர் நடவடிக்கையின் பயனாக தற்போது ஆற்று மணல் எடுப்பது நிறுத்தப்பட்டுள்ளது.CM sir

உங்கள் நண்பர் கனிம வள வழக்கில் தொடர்புடைய ஜனார்த்தன ரெட்டி (Gali Janarthana Retty) அவர்களுக்காக தமிழ்நாட்டின் ஆறுகளில் மணல் எடுக்க உத்தரவிட்டுள்ளீர்களா? ஏற்கனவே கன்னியாகுமரி மாவட்ட கடற்கரை அணு கனிம மணல் எடுக்க ஓராண்டு நீட்டித்து உத்தரவிட்டது போல்,தமிழக ஆற்று மணலையும் கொள்ளையடிக்க முயற்சிப்பதா? ஏற்கனவே தமிழக விவசாயிகள் வாங்கிய கடனை தள்ளுபடி செய்வதாக அறிவித்து ஏமாற்றியது நினைவிருக்கிறதா? காவிரி தண்ணீரையும் தமிழகத்துக்கு பெற்றுக் கொடுக்க எந்த முயற்சியிலும் ஈடுபடாத தாங்கள் ஆற்று மணலையும் அள்ளி விவசாயிகளை தற்கொலைக்கு தள்ள துணிந்து விட்டீர்களா?

இவ்வாறு முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியுள்ளார்.

பெரம்பலூர் மாவட்டம்

வேப்பூர் கிழக்கு ஒன்றியச் செயல்வீரர்கள் கூட்டம்!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் சிறப்புரை!

பெரம்பலூர்,ஜூலை,17- பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் கிழக்கு ஒன்றியம் சார்பில் ஒன்றிய கழக செயலாளர் அழகு. நீலமேகம் தலைமையில் ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்த கூட்டத்தில் மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் இரா.ப. பரமேஷ்குமார், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு துணை செயலாளர் பா. துரைசாமி, வேப்பூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் தி. மதியழகன், பொதுக்குழு உறுப்பினர் பட்டுச்செல்வி ராஜேந்திரன், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் பிரபா செல்லப்பிள்ளை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செ.ஆதவன், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ.எம்.கே.கரிகாலன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மா.பிரபாகரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

த.வெ.க. ஆட்சியில் வெள்ளகோவில் அருகே

பெயிண்டரை நிர்வாணப்படுத்தி வீடியோ!

போலீசார் 2 பேரை கைது செய்துள்ளனர்!

திருப்பூர், ஜூலை.17- த.வெ.க. ஆட்சியில் திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் அருகே பெயிண்டரை நிர்வாணப்படுத்தி வீடியோ 2 பேரை போலீசார் கைது செய்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் பகுதியை சேர்ந்தவர் நாகராஜ் (21). திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் பகுதியில் தங்கி கூலி வேலை செய்து வருகிறார். இந்நிலையில், நாகராஜை கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு வெள்ளகோவில் போலீசார் கஞ்சா வழக்கில் கைது செய்து சிறையில் அடைத்தனர். இதனைதொடர்ந்து, ஜாமீனில் வெளி வந்த நாகராஜ், தான் கைதானத்திற்கு காங்கயம் கரூர் சாலை பகவதி பாளையத்தைச் சேர்ந்த பெயிண்டர் சந்தோஷ்குமார் தான் (வயது 18) என கூறி அவரை அவ்வப்போது மிரட்டி வந்துள்ளார். கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு நாகராஜ், சந்தோஷ்குமார் மற்றும் அவரது நண்பர் கோகுல் பிரசாத் (வயது 23) ஆகிய 3 பேரும் வீரசோழபுரம் காட்டுப்பகுதிக்கு சென்று மது அருந்தியுள்ளனர்.

அப்போது அங்கு வந்த நாகராஜின் நண்பர்களான சஞ்சய் (வயது 23) கிரி (வயது 22) ஆகியோருடன் சேர்ந்து கொண்டு சந்தோஷ்குமாரை கட்டையால் கொடூரமாக தாக்கியுள்ளனர். இதில், காயமடைந்த அவரை ஆடைகளை கழட்டி நிர்வாணப்படுத்தி அதனை செல்போனில் வீடியோ எடுத்து யாரிடம் சொல்லக்கூடாது என்று மிரட்டி யுள்ளனர். இதுகுறித்து சந்தோஷ்குமார் மற்றும் கோகுல்பிரசாத் ஆகியோர் வெள்ளகோவில் காவல் நிலையத்தில் இரண்டு நாட்களுக்கு முன்பு புகார் அளித்தனர். அதன்பேரில் போலீசார் வழக்கு பதிவுசெய்து நாகராஜ் மற்றும் சஞ்சய் ஆகியோரை கைது செய்து காங்கயம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி தாராபுரம் சிறையில் அடைத்தனர். மேலும், இவ்வழக்கில் தலைமறைவாக உள்ள கிரியை போலீசார் தேடி வருகின்றனர்.

கோவை மாவட்டம், பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம், தொண்டாமுத்தூர் மற்றும் சமத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையத்தை பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி திறந்து வைத்தார். இதில் உடுமலைப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார், ஒன்றிய கழக செயலாளர் ஜி.கதிர்வேல், பேரூர் கழக செயலாளர் காளிமுத்து உள்பட அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை-பெங்களூரு புல்லட் ரயில் பூமிக்கடியில் இயக்கத் திட்டம்!

புதிய டெண்டருடன் அடுத்த கட்டத்திற்கு நகர்வு பணிகள்

சென்னை,ஜூலை.17- பூமிக்கடியில் சென்னை-பெங்களூரு புல்லட் ரயில் திட்டத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை மற்றும் பெங்களூரு இடையே அதிவேக புல்லட் ரயில் இயக்குவதற்கான திட்டப் பணிகள் அடுத்த முக்கிய கட்டத்தை எட்டியுள்ளன. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை புதுப்பிக்கவும், புதிய பொறியியல் ஆய்வுகளை மேற்கொள்ளவும் தேசிய அதிவேக ரயில் கழகம் புதிய டெண்டர் ஒன்றை வெளியிட்டுள்ளது. ஏற்கனவே 2024ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சென்னை-பெங்களூரு-மைசூர் வழித்தடத்திற்கான திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதில், சென்னை-பெங்களூரு இடையேயான பகுதிக்கு முதல் முன்னுரிமை அளிக்கப்பட்டு தற்போது பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

புதிதாகக் கோரப்பட்டுள்ள இந்த டெண்டர் மூலம், அடுத்த 150 நாட்களுக்குள் நில அளவை, மண் பரிசோதனை மற்றும் வழித்தட மறுஆய்வுப் பணிகளை முடிக்க இலக்கு நிர்ணயி க்கப்பட்டுள்ளது. மேலும், புல்லட் ரயில் பாதை செல்லும் வழியில் உள்ள கூவம், பாலாறு போன்ற முக்கிய ஆறுகளைக் கடக்கும்போது எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் இருக்க விரிவான வெள்ள அபாய மற்றும் நீரியல் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட உள்ளன.

பெரம்பூர் லோகோ ஒர்க்ஸ் மற்றும் ஐ.சி.எஃப் ரயில் பெட்டித் தொழிற்சாலைப் பகுதிகளைக் கடக்கும் இடங்களில் மேம்பால ரயில் பாதைகளை வடிவமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக பொதுப்பணித் துறை, சென்னை குடிநீர் வாரியம் மற்றும் பிற உள்ளாட்சி அமைப்புகளிடம் இருந்து தேவையான தரவுகள் சேகரிக்கப்பட்டு, புதிய நில அளவைப் படங்களும், தேவைப்பட்டால் புதிய நிலக் கையகப்படுத்துதல் திட்டங்களும் தயாரிக்கப்பட உள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது. பரந்தூரில் அமையவிருந்த புதிய பசுமை வழி விமான நிலையத் திட்டத்தைக் கைவிட மாநில அரசு முடிவெடுத்துள்ளதாகக் கூறப்படும் நிலையிலும், சென்னை-பெங்களூரு இடையேயான 306.2 கி.மீ நீள புல்லட் ரயில் பாதையில் பரந்தூர் ரயில் நிலையம் தொடர்ந்து தக்கவைக்கப்பட்டுள்ளது. இந்த புல்லட் ரயில் பாதை சென்னை, பூந்தமல்லி, பரந்தூர், சித்தூர், பங்காரு பாலம், கோலார், மாலூர், ஒயிட்ஃபீல்டு, பெங்களூரு ஆகிய ஊர்களை இணைக்கும் என கூறப்படுகிறது.

குறிப்பாக சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு அருகில் பூமிக்கு அடியில் சுரங்கப்பாதை யாக அமைக்கப்படும். இது சென்னை மெட்ரோ ரயிலுடன் இணைக்கப்பட்டு பயணிகள் எளிதாக மாற வழிவகை செய்யப்படும். அதே போல் பூந்தமல்லி (மேம்பாலம்) தேசிய நெடுஞ்சாலை-4 இன் வடக்குப் பகுதியில் மேம்பால நிலையமாக அமைக்கப்பட உள்ளது. இது வெளிவட்டச் சாலை, மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டப் பணிகள், சென்னை விமான நிலையம் ஆகியவற்றுடன் இணைக்கப்படும். பரந்தூர் (மேம்பாலம்) முன் மொழியப்பட்ட விமான நிலையப் பகுதியின் தெற்குப் பக்கத்தில் மேம்பால நிலையமாக அமையும். இது சென்னை-பெங்களூரு விரைவுச்சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலை-48 உடன் இணைப்புச் சாலைகள் மூலம் இணைக்கப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு 53. மண்டலம் 05 பகுதியில் உள்ள பெரியபாளையத்தம்மன் கோவில் தெரு.கிழக்கு விதி பகுதியில் நீண்ட காலமாக கழிவு நீர் இணைப்பு மாற்றாமல் இருந்தது கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வட சென்னை வளர்ச்சி திட்டம் மூலம் தற்போது பெருநகர சென்னை குடிநீர் வழங்கல் துறை சார்பில் கழிவுநீர் இணைப்பு புதியதாக பொருத்தும் பணியில் மாமன்ற உறுப்பினர் பா.வேளாங்கன்னி, மாணவர் அணி பகுதி துணை அமைப்பாளர் பா.சக்திதாசன் மற்றும் மெட்ரோ வாட்டர் நிர்வாகிகள் ஈடுபட்டனர்.